Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.104/2024, Cr.No.248/2024, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேல்முருகன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராமு | தொழில் | மாணவர் |
| கிராமம் | சிலம்பு நகர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 20 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 22nd day of August 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u> (1, 2 எதிரிகள் ஆஜர், 3,4 எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் படித்துக்கொண்டிருக்கிறேன். கடந்த 26.06.2024 அன்று இரவு 07.00 மணிக்கு நானும் என்னுடைய நண்பர் பூவரசனும் சேர்ந்து குரும்பட்டி கிராமத்தின் திருவிழாவிற்கு சென்றிருந்த போது அங்கு மேளம் அடித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நாங்கள் இருவரும் நடனம் ஆடினோம். அப்போது எதிரி கௌரி எங்களைப் பார்த்து "வெளியூர்காரர்கள் இங்கு ஆடக்கூடாது" என்று கூறி "தேவிடியா பையா, ஓம்மாள ஓக்க" என்று திட்டி எதிரிகள் கௌரிசங்கர், மஞ்சுநாதன், சந்தோஷ், கௌதம் ஆகியோர் எங்களை அடிக்க வந்தார்கள். பின்னர் வீட்டிற்கு செல்லும் போது ஆஜர் எதிரி கௌதம் எனது சட்டையை பிடித்து பின் பக்க தலையில் கையால் அடித்ததில் எனக்கு காது கிழிந்து விட்டது. மேலும், சந்தோஷ் என்பவர் கல்லால் என்னுடைய தலையில் அடித்ததில் தலையில் காயம் ஏற்பட்டு 6 தையில்கள் போடப்பட்டது. எதிரி கௌதம் என்னுடைய முகத்தில் கையால் அடித்தார். எதிரி மஞ்சு என்னுடைய நெஞ்சின் மீது எட்டி உதைத்தார். எதிரி கௌரி என்னுடைய நண்பர் பூவரசனை தலையில் அடித்ததில் அவருக்கு 2 தையில்கள் போடப்பட்டது. நான் மயக்கமடைந்து விட்டேன். எதிரிகள் அதிக ஆட்களை அழைத்து வந்து

எங்களை அடித்தார்கள். பின்னர் என்னுடைய அண்ணன் எங்களை ஆண்டியப்பனூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். பின்னர் மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் அங்கு சிகிச்சையிலிருந்த போது குரிசிலாப்பட்டு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றுச் சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிது.** என்னிடம் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு இவ்வழக்கின் எதிரிகள் 4 பேரும் "போலீசாரிடம் ஏன் புகார் கொடுத்தாய் பெரிய மயிறா" என்று மிரட்டி அடிக்க வந்தார்கள். பின்னர் நான் இவ்வழக்கிலிருந்து ஜாமினில் வந்து விட்டேன். எதிரிகள் என்னை அடிக்க வந்ததால் எங்கள் ஊரிலுள்ளவர்கள் விளக்கி விட்டார்கள். இவ்வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.08.22 20:07:14 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.